16—

கால்நடை மருத்துவமனை

***6288—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியிலுள்ள கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருந்தகம், மருத்துவமனை என்று சொன்னாலே பழைய கட்டடத்தில்தான் இயங்கும் என்ற நிலையெல்லாம் தற்போது மாறி கடந்த 2011-2012 ஆம் நிதியாண்டில் அம்மா அவர்கள் ரூ.122 கோடியை ஒதுக்கினார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய திருவையாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேட்ட திருக்காட்டுப்பள்ளி கால்நடை மருத்துவமனைக்கு ரூபாய் 26.66 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு தற்போது அங்கே கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வெகு விரைவிலே அந்தப் பணி முடிவடையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.*

திரு. மு. ரெத்தினசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் ஆட்சி செய்து, ஏழையெளிய நடுத்தர மக்களுடைய பொருளாதார உயர்வுக்கும், அமைதிக்காகவும் வாழ்ந்துகொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியிலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு நான் கேள்வி கேட்டு 10 நாட்களிலேயே அந்தப் பணி சிறப்பாகத் தொடங்கி முடிவடைகிற நிலையில் உள்ளது. அதற்கு மாண்புமிகு*

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்ளுக்கு நன்றியை கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

சுற்றுலா மையம்

***4573—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் பகுதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதி, ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறைமூலம் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மலை அடிவாரத்தில் நிலச்சீரமைப்பு, பக்தர்கள் ஓய்வறை, கண்காட்சி மையம், வரவேற்பறை, யோகா-தியான மையம், சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு, கடந்த 27-9-2012 ஆம் நாளன்று, உலக சுற்றுலா தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் காணொலி காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும் உபயோகத்திற்காவும் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.